

தென்காசி தெற்கு மாவட்டம், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கீழப்பாவூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சீனித்துரை ஏற்பாட்டில் பாவூர்சத்திரம் பேருந்து நிலையத்தில் நீர்மோர் பந்தல் அமைக்கப்பட்டது. இந்நீர்மோர் பந்தலை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், குடிநீர் மற்றும் தர்பூசணி ஆகியவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோடைவெயிலில் பொதுமக்களை பாதுகாக்க

# நெல்லை மேற்கு மாநகரப் பகுதிகளில் தண்ணீர் பந்தல்!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

நெல்லை, மே.10-

கோடை வெயிலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க நெல்லை மேற்கு மாநகர பகுதிகளில் தண்ணீர் பந்தல் அமைப்பது தொடர்பாக நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

தமிழகமெங்கும் தண்ணீர் நீர்மோர் பந்தல் அமைக்க வேண்டும் என நமது கழகத் தலைவர்,முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைகால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி, அக்னி நட்சத்திரமும் தொடங்கியுள்ளது. இந்நிலையில் தமிழக மக்களை இக்கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில்,தி.மு.க.சார்பில், தமிழகத்தில் உள்ள மாநகர,நகர, பகுதி,பேரூர்,வட்டம் மற்றும் கிராமங்கள் என அனைத்து இடங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களான தெருமுனைச் சந்திப்புகளிலும் சாலை மற்றும் தெருக்கள் ஓரமாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் யாருக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் தண்ணீர் பந்தல் அமைத்து,பொதுமக்களின் தாகம் தீர்த்திட வேண்டும். என கழக தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்கள். மேலும் அவ்வாறு அமைக்கப்படும் தண்ணீர் பந்தலில் குடிநீர்,நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டும் என்றும்,திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எப்போதும் மக்களுக்காக உழைக்கும் இயக்கம் என்றும் நம் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனவே கடுமையான கோடை வெயிலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க கழகத் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும்,கழக இளைஞர் அணி செயலாளர் முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் அறிவுறுத்தலின்படி, தங்களின் பகுதிகளில் கோடை வெயிலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில், பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகச் சொந்தங்கள் அனைவரும் தண்ணிர் நீர்மோர் பந்தல் அமைத்து பொதுமக்களை கோடை வெயிலில் இருந்து காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

### இந்தியா முழுவதும்

# 1 லட்சம் ஓராசிரியர் பள்ளிகள் உள்ளன!

## நிதி ஆயோக் அறிக்கை அதிர்ச்சித் தகவல்!

புதுடெல்லி, மே 10-

நாடு முழுவதும் ஓராசிரியர் பள்ளிகள் 1 லட்சம் உள்ளன என்று நிதி ஆயோக் தெரிவித்து உள்ளது.

"இந்தியாவில் பள்ளிக் கல்வி முறை" என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டு உள்ளது. இந்த அறிக்கை, பள்ளி உட்கட்டமைப்பு, பணியாளர்கள், மாணவர் சேர்க்கை மற்றும் கற்றல் குறிகாட்டிகள் குறித்த தேசிய மற்றும் மாநில அளவிலான தரவுகளைத் தொகுத்துள்ளது.

உட்கட்டமைப்பு பற்றிய அறிக்கையில், ஒட்டுமொத்த கழிப்பறை வசதி அதிகமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. இருந்தாலும், 98,592 பள்ளிகளில் பெண்கள் கழிவறைகள் செயல்படும் நிலையில் இல்லை என்றும், 61,540 பள்ளிகளில் பயன்படுத்தக் கூடிய கழிப்பறைகளே இல்லை என்றும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. சுமார் 14,505 பள்ளிகளில் தண்ணீர் வசதி இல்லை என்றும், 59,829 பள்ளிகளில் கை கழுவும் வசதிகள் இல்லை என்றும் கூறப்பட்டு உள்ளது.

அதேநேரத்தில், கடந்த பத்தாண்டுகளில் பள்ளிகளுக்கான மின்சார வசதி 55 சதவீதத்தில் இருந்து 91.9 சதவீதமாக மேம்பட்டுள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இருப்பினும், 1.19 லட்சம் பள்ளிகளில் இன்னும் மின்சார வசதி செயல்பாட்டில் இல்லை, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 51.7 சதவீதம் மட்டுமே அறிவியல் ஆய்வகங்களைக் கொண்டுள்ளன என்றும் அறிக்கை கூறுகிறது.

அறிக்கையில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் ஓராசிரியர் பள்ளிகள் ஆகும். நாட்டில் 1,04,125 பள்ளிகள் ஓராசிரியருடன் வருவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த பள்ளிகளில் சுமார் 89 சதவீதம் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன.

இந்தியாவில் தரமான கல்விக்கு தடையாக இருக்கும் மற்றொரு காரணி ஆசிரியர்களின் திறன் ஆகும். 2 சதவீத ஆசிரியர்களால் மட்டுமே கணிதத்தில் 70 சதவீதத்துக்கும் மேல் மதிப்பெண் பெற வைக்கமுடிகிறது என்றும். சராசரி மதிப்பெண் 46 சதவீதமாக உள்ளது என்பதையும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரை, நாட்டில் சுமார் 7,993 பள்ளிகளில் மாணவர் சேர்க்கையே இல்லை. இத்தகைய பள்ளிகள் அதிகபட்சமாக மேற்கு வங் காளத்தில் உள்ளது. அங்கு 3,812 பள்ளிகளிலும், தெலுங்கானாவில் 2,245 பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை இல்லை.

இடைநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றல் விகிதத்தின் தேசிய சராசரி 11.5 சதவீதம் ஆகும். ஆனால் இதைவிட அதிகமாக மேற்கு வங்காளம் (20 சதவீதம்). அருணாசல பிரதேசம் (18.3 சதவீதம்), கர்நாடகா (18.3 சதவீதம்), அசாம் (17.5 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

மேலும், இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 4.6 சதவீதத்தை மட்டுமே கல்விக்காக செலவிடுகிறது என்றும், ஆனால் இது இங்கிலாந்து. அமெரிக்காவில் சுமார் 5.9 சதவீதமாகவும், ஜெர்மனி, பிரான்சில் சுமார் 5.4 சதவீதமாகவும் உள்ளது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**செ. கந்தப்பன்**
**மே 11 (1990)**



கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.

1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை "அண்ணே" என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்" என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழகத்தில்

# நிலையான ஆட்சி அமைய வாய்ப்பு இல்லாததால் வளர்ச்சி தடைப்படும்!

## கொ.ம.தே.க. பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!



திருப்பூர், மே 10-

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் வந்த முடிவின்படி தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைவதற்கான சூழ்நிலைகள் இல்லை. பல போராட்டங்கள், பேரங்களுக்கு பின் ஆட்சி அமையலாம் ஆனால் தமிழ்நாட்டிற்கான நலன் தரக்கூடிய ஆட்சி அமைய வாய்ப்பில்லை. எந்த ஒரு வளர்ச்சி திட்டங்களையும் அமைகின்ற அரசு முன்னெடுத்து விட முடியாது. ஒரு உதாரணத்திற்கு பரந்தூரில் அமையவிருக்கின்ற விமான நிலையத்தை தமிழகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான திறவுகோலாக பார்த்தோம். பரந்தூர் விமான நிலையம் இப்போது அமைவதற்கான சூழல் தென்படவில்லை. அதன் மூலம் நாம் எதிர்பார்த்திருந்த வளர்ச்சி நின்று போகும்.

நிலையான ஆட்சி இல்லாத காரணத்தினால் புதிய முதலீடுகளை செய்வதற்கு பெரிய நிறுவனங்கள் முன்வராது. ஆதலால் தொழில் வளர்ச்சி குறைந்து வேலை வாய்ப்புகள் குறைந்து போகும். படித்து முடித்த இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் கிடைக்காமல் சிரமப்படக்கூடிய சூழல் ஏற்படும். பல பெரிய நிறுவனங்கள் ஒருவேளை தமிழ்நாட்டிற்கு வர விரும்பினால் மற்ற மாநில அரசுகளுடைய போட்டியால் தடுக்கப்படும். சில நிறுவனம் புதிதாக வந்தால் தற்போது இருக்கின்ற மாநிலங்களுக்கு இடையிலான போட்டியில் சலுகைகள் தரவேண்டிய தேவை இருக்கும். அப்படிப் பட்ட சலுகைகளை தருவதற்கு அரசை ஆதரிக்கின்ற கட்சிகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

அந்த சூழலில் மற்ற போட்டி மாநிலங்கள் தங்கள் மாநிலங்களுக்கு தொழில் நிறுவனங்களை ஈர்க்க வாய்ப்பு இருக்கும். எப்படி யோசித்துப் பார்த்தாலும் தொடர்ந்து வளர்ந்து கொண்டு இருந்த தமிழகத்தின் வளர்ச்சி கேள்விக்குறியாகி போகும். தற்போதைய சூழலில் தமிழ்நாட்டில் அமைய விருக்கின்ற புதிய அரசால் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் நல்லது நடக்க வாய்ப்பில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# முக்கியமான மெசேஜ்களை இனி தவறவிடாதீர்கள்!

## 'வாட்ஸ்அப்' அறிமுகப்படுத்திய புதிய வசதி!

சென்னை, மே 10-

பலருக்கு வாட்ஸ்அப் இன்று தனிப்பட்டதும், தொழில்துறையுடனும் தொடர்புடைய முக்கிய மையமாக மாறிவிட்டது. குடும்பச் வேலை தொடர்பான உரையாடல்கள், பள்ளி குழுக்கள், வாடிக்கையாளர் மெசேஜ்கள் என அனைத்தும் ஒரே இடத்தில் சேர்ந்துவிடும்போது, அவற்றை நிர்வகிப்பது சற்று சிரமமாக உணரப்படலாம்.

இந்த சிக்கலை எளிதாக சமாளிக்க உதவும் புதிய வசதிதான் கஸ்டம் லிஸ்ட் (Custom Lists). இந்த அம்சத்தின் மூலம், உங்கள் உரையாடல்களை குடும்பம், வேலை, நண்பர்கள், விற்பனையாளர்கள் போன்ற பிரிவுகளாக பிரித்து ஒழுங்குபடுத்தலாம். இதனால் தேவையான தகவல்களைத் தேடி நீண்ட நேரம் 'ஸ்க்ரோல்' செய்ய வேண்டிய அவசியம் குறையும்....

இந்த வசதியை பயன்படுத்த, வாட்ஸ்அப் சாட்ஸ் (WhatsApp Chats) பகுதியில் சென்று, கீழே ஸ்வைப் செய்தால் 'லிஸ்ட்' என்ற விருப்பம் கிடைக்கும். அதில் புதிய பட்டியலை உருவாக்கி, அதற்கான உரையாடல்களை சேர்த்துக் கொள்ளலாம். பின்னர் அந்த பட்டியலைத் தேர்வு செய்தால், அந்த பிரிவுக்கான மெசேஜ்கள் மட்டுமே தனியாகக் காணப்படும்....

இந்த 'லிஸ்ட்' அம்சம் புதிய மெசேஜ்களின் எண்ணிக்கையை குறைக்காது. ஆனால், அவற்றை சீராக பிரித்து காட்டுவதன் மூலம், முக்கியமான உரையாடல்களை முன்னுரிமையுடன் கவனிக்க உதவுகிறது. தினசரி வாட்ஸ்அப் பயன்பாட்டை சுலபமாகவும் தெளிவாகவும் மாற்றும் ஒரு பயனுள்ள அப்டேட்டாக இது பார்க்கப்படுகிறது.

### குறைந்தபட்சமாக ரூ.22 லட்சம் அதிகரிப்பு!

# எச்1பி விசா சம்பளம் 3 மடங்கு உயருகிறது!

## அமெரிக்கா அதிரடி!

வாஷிங்டன், மே 11-

எச்1 பி விசா திட்டத்தின் கீழ் ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 3 மடங்கு உயர்த்த அமெரிக்கா அதிரடி முடிவு செய்துள்ளது. அமெரிக்காவில் எச்1பி விசா ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

அதிபர் டிரம்ப் வந்த பிறகு எச்1பி விசாவுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக கடந்த ஆண்டில், செப்டம்பர் 19 அன்று வெளியிடப்பட்ட உத்தரவு மூலம் அமெரிக்காவிற்கு வெளியே உள்ள எச்1பி விசா விண்ணப்பதாரர்களுக்கு ரூ.85 லட்சம் கட்டணம்(தற்போது ரூ.95 லட்சம்) நிர்ணயிக்கப்பட்டது.

மேலும் விசா கட்டண உயர்வுக்கு ஏற்றார்போல் எச்1பி விசா ஊழியர்களுக்கு சம்பள விகிதத்தையும் உயர்த்த அதிபர் டிரம்ப் அதிரடி உத்தரவுகளை பிறப்பித்தார். தற்போது எச்1பி விசா ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளை விட 30 சதவீதம் சம்பளத்தை உயர்த்த அமெரிக்க தொழிலாளர் துறை முன்வந்துள்ளது. இந்த புதிய விதி மூலம் நுழைவு நிலை முதல் அதிக அனுபவம் வாய்ந்த நிலை வரையிலான நான்கு பிரிவுகளுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த முயல்கிறது. தற்போதுள்ள ஊதிய நிலைகள் 20 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டவை என்றும், அவை அமெரிக்கத் தொழிலாளர்களைப் போதுமான அளவு பாதுகாக்கத் தவறிவிட்டன என்றும் கூறப்பட்டுள்ளது.

அதன்படி புதிய சம்பள விகிதம் வருமாறு:

★ நுழைவு நிலை வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான தற்போதைய ஊதியம் ஆண்டுக்கு ரூ.70 லட்சமாக உள்ளது. இனிமேல் அது ரூ.92 லட்சமாக உயர்கிறது. இது பழைய விகிதங்களை விட 33.39 சதவீத உயர்வாகும்.

★ நிலை IIல் பணியாற்றும் ஊழியர்களுக்கு தற்போது சம்பளம் ரூ.94 லட்சமாக உள்ளது. இனிமேல் ரூ.1.16 கோடியாக உயர்த்தப்பட உள்ளது. இது 24.47 சதவீத உயர்வு ஆகும்.

★ நிலை IIIல் பணியாற்றும் ஊழியர்களுக்கு தற்போது சம்பளம் ரூ.1.19 கோடியாக உள்ளது. இனிமேல் ரூ.1.39 கோடியாக உயர்த்தப்பட உள்ளது. இது 20.79 சதவீதம் ஆகும்.

★ நிலை IVல் பணியாற்றும் ஊழியர்களுக்கு தற்போது சம்பளம் ரூ.1.36 கோடியாக உள்ளது. இனிமேல் ரூ.1.65 கோடியாக உயர்த்தப்பட உள்ளது. இது 21.68 சதவீத உயர்வு ஆகும்.

இந்த ஊதிய உயர்வு அமெரிக்காவில் உள்ள நகரங்களுக்கு ஏற்றார்போல் மாறுபடும் என்று கூறப்பட்டுள்ளது. மே 26 வரை பொதுமக்களின் கருத்துகளை தெரிவிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உயர்த்தப்பட்ட ஊதிய விகிதங்களைக் கருத்தில் கொண்டு, சிறிய நிறுவனங்களால் நுழைவு நிலை வேலைகளுக்குப் புதிய வர்களை இனி பணியமர்த்த முடியாமல் போகலாம் என்று கருத்து எழுந்துள்ளது.

# இந்தியா - அமெரிக்கா இடையே குவாண்டம், அணுசக்தி!

## ஏ.ஐ. ஒத்துழைப்பில் முக்கியத்துவம்!

வாஷிங்டன், மே 11-

வாஷிங்டனில் நடந்த அமெரிக்கா இந்தியா செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்ப மன்ற கலந்துரையாடலில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாத்ரா பேசியதாவது:

அணுசக்தி திட்டங்களில் பயன்படுத்தப்படும் அணுக்கரு இணைவு தொழில்நுட்பம் அமெரிக்காஇந்தியா இடையேயான முன்னணி ஒத்துழைப்பு துறைகளில் குறிப்பிடத்தக்கது. பிரான்சில் அணுக்கரு இணைவு உலையை அமைப்பதற்கான சர்வதேச ஆராய்ச்சி பரிசோதனையில் இந்தியாவும் அமெரிக்காவும் பங்கேற்றுள்ளன.

அணுசக்தி, ஏஐ, குவாண்டம் தொழில்நுட்பம் ஆகியவை இரு நாடுகளின் ஒத்துழைப்பில் முன்னணி துறைகளாக உள்ளன. அணுக்கரு இணைவு தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, செயற்கை நுண்ணறிவுடன் இணைத்து, குவாண்டம் முன்னேற்றத்தின் மூலம், இன்னும் சில ஆண்டுகளில் குவாண்டம் கணினித்திறன், அணுக்கரு இணைவில் புதிய கணினித் திறன்களை கொண்டு வரும் நிலைக்கு நம்மை இட்டுச் சென்றால் அது மிகுந்த உற்சாகமான ஒன்றாக அமையக் கூடும். இந்தியா அமெரிக்கா கூட்டாண்மையில் உயிரிமருந்துகள் துறையும் முக்கியமான முன்னுரிமைப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது என்றார்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட 6 வட்டங்களில் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் எல்பிஎப் மோகன், வட்ட செயலாளர்கள், சி.லோகநாதன், த.வ.லால், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், ஆ சுந்தர்ராஜன், மு.சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்களுடன் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.